# LAABH SAMACHAR

லாப் ஸமாச்சார்　　　　வணிக மாத இதழ்

Volume: 15　　Issue : 03　　JUNE 2026　　Tamil & English Monthly　　Price: Rs. 10/-

official Publication SOURASHTRA CHAMBER OF COMMERCE










Sourashtra Chamber of Commerce honoured Newly elected Tamilnadu Legislative Assembly Candidates
Sri. **C.T.R. Nirmal Kumar**, Minister for Electricity and Energy Resources,
Sri. **M.M. Gopison**, M.L.A., Madurai South and Sri. **Karthikeyan**, M.L.A., Madurai East.
Our SCC Laabh Samachar May month magazine released by Sri. **C.T.R. Nirmal Kumar**

BOOK POST

To

அவோ! மிளோ!! ஹொடோ!!!

SITCON
SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE
2026



அனைத்து வகையான காலணிகள்
மொத்த விற்பனையாளர்கள்

**METRO**

# மெட்ரோ ஷூ மார்ட்

16, அமெரிக்கன் மிஷன் சர்ச் தெரு,
(பெரியார் பஸ் ஸ்டாண்ட் அருகில்)
மதுரை - 625 001.

**PH : 23322364, 2331297, 4382343**



# JaiGenga Uniforms जेयगंगा यूनिफाम

133-A, East Masi Street, 4 Feet Lane, Madurai - 625 001.
Email : jaigenga@gmail.com | Website : www.jaigenga.com
89035 34438, 887059 4105 ESTD : 1968

Mfrs. Hospital Dress Material & Uniform, School & College Lab Coats, Aprons Industrial Uniform, Hotel Industry Uniform, Pharmaceuticals Drugs Mfrs. Dress Wears




ASTROLOGER, PALMIST, ACU PUNCTUREIST


OM SHANTI

**Cell: 90805 54802, 99424 90217**

## Prof. Dr. M.V. SUBBURAMAN

M.A.(Hin)., M.A.(Phil)., M.A.(Astro)., M.A. (Yoga),
M.Ed., M.Phil., M.D.(Acu.)., M.B.A., PGDELT, Ph.D.(Hin)

**MARRIAGE & RE-MARRIAGE MATCHING CENTRE**



Academic Co-ordinator for Hindi, D.D.E., M.K. University
(Retd. HOD of Hindi, The American College, Madurai).

ACU Puncture Treatment : 11.00 A.M - 2.00 P.M
Astrology Consultancy 5.00 P.M - 9.00 P.M

4, Keelamathur Pallivasal Main Street, Near Alankar Theatre, Madurai - 625009.
email: subburamanastro@gmail.com

*Ananda Nilayam*

# Mayflower

*The Banquet Hall A/C*

| | | |
|---|---|---|
| Marriage Function | Betrothal | Naming Ceremony |
| Birthday Party | Puberty | Get-to-gether |

*Hall available for all type of functions*

Location - Google Map

Address: 161F, Salaipillaiyar Koil Street, Kamarajar Salai, Madurai - 625001

**For Bookings - Contact: 94439 30728 / 86100 06493 / 92442 31583**

# தலைவர் அறிக்கை

அஸ்கிதெங்கோ மொன்னு பொறெ

**நமஸ்கார்...**

K.K. தினேஷ், தலைவர்

சிட்கான் 2026 மாநாட்டுப் பணிகள் வெகு சிறப்பாக நடைபெற்று வருகின்றன. 85க்கும் அதிகமான ஸ்டால்கள் இடம்பெறவுள்ள இந்த கண்காட்சியில் ஸ்டால் அமைக்க பலர் ஆர்வத்துடன் முன்பதிவு செய்துவருவது மகிழ்ச்சியளிக்கிறது. ஸ்டால் அமைக்க விரும்புவோர் விரைந்து புக்கிங் செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அதே போல, விழா மலரில் பலர் ஆர்வத்துடன் தங்கள் நிறுவன விளம்பரத்தை அளித்து வருகிறார்கள். மலர் பணியும் மிகச்சிறப்பாக நடைபெற்று வருவது சிறப்பு. இந்த மாநாட்டு மலரில், அங்கத்தினர்கள், தங்களின் தொழில் குறித்த தகவல்கள், அனுபவங்களை கட்டுரையாக எழுதித் தரலாம். குழுவின் ஒப்புதலுடன் மலரில் இடம்பெறும் என்று நம்பலாம். மலரை வாசிப்பவர்களுக்கு இது பயனுள்ளதாகவும் இருக்கும். தங்களின் கட்டுரையும், காலத்தால் என்றென்றும் நிலைத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மாநாட்டிற்கான சிறப்பு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டு வருகின்றன. நம் சமூக தொழில் முனைவோர்களுக்கு பயனுள்ள தகவல்களை அளிக்க சான்றோர்கள், முன்னோடி தொழில் முனைவோர்கள், சிறப்புப் பேச்சாளர்களைக் கொண்டு நடைபெற இருக்கின்றன. அதோடு, பிரபலங்களும் பங்கேற்க இருக்கிறார்கள்.

உலகெங்கும் உள்ள நம் சமூக தொழில் முனைவோர்களுக்காக இந்த மாநாடு நடத்தப்படுகிறது. அனைவரும் இந்த மாநாட்டில் கலந்து கொள்ள அழைக்கப்படுகிறார்கள். அதோடு, தங்களால் இயன்ற நன்கொடைகளையும் தாராளமாக அளிக்கலாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஸௌராஷ்ட்ர தொழில் வர்த்தக மாநாடு மற்றும் கண்காட்சியுடன் சேர்ந்து, மினி மாரத்தான் போட்டியும் நடத்துப்படுகிறது. இந்த மினி மாரத்தான் போட்டியானது, நமது சேம்பர் மற்றும் ஸௌராஷ்ட்ர நெக்ஸ்ட்ஜென் அமைப்பு இணைந்து நடத்துகிறது. இதில் பள்ளி / கல்லூரி மாணவ மாணவிகள், பொது மக்கள் அனைவரும் பங்கேற்கலாம். அதற்கான அறிவிப்பு விரைவில் வெளியாகும். இணைய விருப்பம் உள்ளவர்கள் முன்பதிவு செய்து கொள்ள வேண்டும்.

முப்பெரும் விழாவாக ஆகஸ்ட் 7,8,9 மற்றும் 15, 16 தேதிகளில் நடத்தப்படும் இந்த மாபெரும் நிகழ்வுகளில், தங்களின் முத்தான வருகையை எதிர்பார்க்கிறோம். அவசியம் அனைவரும் தங்களின் குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துகொள்ள அழைக்கிறோம்.

நன்றி...

## SOURASHTRA CHAMBER OF COMMERCE
## BOARD OF MEMBERS YEAR 2024-2026

| Office Bearers | Designation | Contact |
|---|---|---|
| K.K. Dinesh | President | 98421 16461 |
| T.R. Mohanram | Imm. Past President | 93441 01432 |
| K.K. Kubendran | Vice President | 93441 25647 |
| A.B. Kumaresh Babu | General Secretary | 93443 04980 |
| V.V. Ramlakshmanji | Treasurer | 94439 30728 |
| S.G. Srinivasan | Joint Secretary | 91500 99456 |
| T.N. Suriyaprakash | Joint Secretary | 93441 52068 |
| V.G. Ramdoss | External Aff. / EC Member | 93441 00360 |
| J.S. Sayee Jeevan | EC Member | 90809 51577 |
| A.R. Ganesan | EC Member | 98421 75804 |
| B.S. Janaarthanan | EC Member | 97905 75650 |
| T.K. Sivanath Babu | EC Member | 94423 27081 |
| S.M. Karthi Kumaran | EC Member | 94438 31496 |
| S.K.B. Chandraprakash | EC Member | 98655 45048 |
| N.S. Prem Kumar | EC Member | 99944 35350 |
| K.K. Dinakaran | EC Member | 98409 60833 |
| K.V. Kumaresan | EC Member | 98940 51735 |
| S.S. Ramsundar | EC Member | 93441 22181 |
| E.R.K. Vignesh Babu | EC Member | 94422 44648 |
| T.M. Rubesh Babu | EC Member | 95000 35200 |
| S.S. Premkumar | EC Member | 96293 42295 |
| S.R. Sundarnath | EC Member | 92444 03917 |
| M.M. Dhanasekaran | EC Member | 98421 58085 |
| K.B. Sivaprakash Babu | EC Member | 94433 66251 |
| T.K. Yageshwaran | EC Member | 99524 22260 |

| Past Presidents cum EC Members | | Contact |
|---|---|---|
| K.V. Bala, Senior President | - Yr. 2007-2009 | 044 2833 0867 |
| C.K. Sekar | Yr. 2009-2011 | 97900 77111 |
| E.R. Kumaresan | Yr. 2011-2013 | 93674 66777 |
| K.K.G. Prabhakaran | Yr. 2013-2015 | 98409 60845 |
| S.K.R. Ramesh | Yr. 2015-2017 | 96552 34409 |
| M.K. Kaladhar Babu | Yr. 2017-2019 | 99944 84443 |
| Kumaran B. Jaghuva | Yr. 2019-2022 | 99949 26348 |
| **Advisors** | | |
| K.K. Surendranath | | 98409 88810 |
| T.K.D. Mohan | | 98430 52530 |

| Patron Members | |
|---|---|
| K.K. Surendranath | M/s. Varuni Chemicals |
| K.S. Ravindranath | M/s. Indowind Energy Ltd., Chennai |
| M.K. Jawahar Babu | M/s. Jawahar Babu |
| K.R.M. Niranjan Kumar | M/s. India Ultra Sound, Calicut |
| E.R. Kumaresan | M/s. V.P.C. Textiles |
| M.R. Krishnamoorthy | M/s. PT. Kewalram, Indonesia |
| T.S. Sivaprakash | M/s. Shree Sivabalaji Steels (P) Ltd., |
| (Late) K.B. Mohan | M/s. K.B. Mohan, Engineering |
| T.L. Dukaram | M/s. Anezlina Cosmos |
| T.L. Sabari Babu | M/s. Sowbhaagyaas Gold & Diamond |
| B.V. Ramesh | M/s. Karpagam Motors |
| T.E. Yogesh | M/s. The Constructive Company |
| L.G. Padmanabhan Iyer | M/s. Karishma Electro Platers, Mumbai |


| Editorial Board | Designation | Contact |
|---|---|---|
| K.K. Gnana Prabhakaran | Publisher | 98409 60845 |
| E.R.K. Vignesh Babu | Chairman | 94422 44648 |
| K.S. Sivakumar | Member | 93441 51331 |
| Bhaskar Laguduva | Member | 82178 93697 |
| K.K. Shankar | Member | 97881 62559 |
| K.K. Ramkumar | Member | 98421 40007 |



## பொதுச்செயலாளர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- A.B. குமரேஷ் பாபு

**20.05.2026** – மதுரையில், வருமான வரி சம்பந்தமான விழிப்புணர்வு கூட்டத்தில், நமது சேம்பர் சார்பாக தலைவர் திரு. K.K. தினேஷ் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டனர். வருமான வரி தலைமை ஆணையரை சந்தித்து

**26.05.2026** – ஜிஎஸ்டி குறைதீர்க்கும் கூட்டத்திற்கு நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக, ஜிஎஸ்டி வரி ஆலோசனைக் குழுச் சேர்மன் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் கலந்து கொண்டு கோரிக்கை மனுவை அளித்தார்.

**02.06.2026** – ஜுன் மாத தொழில் வர்த்தக கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மதுரை கிளை மேலாளர் திரு. T. ராஜா அவர்கள் கலந்து கொண்டு பேசினார். கௌரவ விருந்தினராக, குவாலியரில் இயங்கும், பிரனவ் மருந்தியல் ஆராய்ச்சி மற்றும் அறிவியல் மையத்தின் முதல்வரும், பேராசிரியருமான டாக்டர். A.K. ஞானச்சந்திரன் அவர்கள் கலந்து கொண்டு பேசினார். இந்தக் கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார்.



## இதழ்குழுத் தலைவர் அறிக்கை

*அங்கத்தினர்களுக்கு வணக்கம்*

- E.R.K. விக்னேஷ் பாபு

ஸௌராஷ்ட்ர சேம்பர்–ன் சிட்கான் வர்த்தக கண்காட்சி மலர் பணிகள் வெகு சிறப்பாக நடந்து வருகின்றன. இதுவரையில், மலரில் விளம்பரம் தந்தவர்கள், தர ஒத்துழைத்தவர்கள் எண்ணிய இலக்கை விட அதிகமாக இருப்பதில் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. மலர் பணிக்கு ஆதரவு தரும் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன்.

மலரில் கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன. நீங்களும் உங்களுக்கு தெரிந்த தலைப்பில் கட்டுரைகளை வழங்கலாம். நிச்சயம் பரிசீலித்து பிரசுரிக்கப்படும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த மே மாத லாப் ஸமாச்சார் இதழ், புதிதாக சட்டமன்ற தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெற்ற திருப்பரங்குன்றம் சட்டமன்ற உறுப்பினரும், மின்சாரத் துறை அமைச்சருமான திரு. C.T.R. நிர்மல் குமார் அவர்களின் கரங்களால் வெளியீடு செய்யப்பட்டது பெரு மகிழ்ச்சியளிக்கிறது. இந்த நிகழ்வில், மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. M.M. கோபிசன் அவர்களும் உடனிருந்தார்.

அவோ! மிளோ!! ஹொடோ!!!

**SITCON**

SOURASHTRA INDUSTRIAL TRADE CONFERENCE

2026

| Exhibition | Conference | Madurai RUN |
|---|---|---|
| 07 \| 08 \| 09 | 15 \| 16 | 09 |
| AUGUST 2026 | AUGUST 2026 | AUGUST 2026 |
| 09.30AM to 09.00PM | 04.00PM to 10PM & 09.00AM to 09.30PM | 06.00AM |
| Arunachalam Kamalambal Hall A/C | Tamilnadu Chamber of Commerce Hatsun Hall A/C | Madurai Gandhi Museum Ground |





Best Compliments
BVK GROUP
Indus Finance Ltd
Indowind Energy Ltd
EverOn Power Ltd
BeKae Properties P Ltd
BVK Foundation
Bala V Kutti
Founder & Chairman
4th Floor (NW), Kothan Building, 114, M G Road, Nungambakkam, Chennai - 6000 834.
No 603, Keshava -BKC, Mumbai - 400 051.
Chennai | Madurai | Aralvoimozhi | Nettur | Gadag | Mumbai

# ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் ஜுன் மாத நிகழ்ச்சி



நமது ஸௌராஷ்டிர சேம்பர் ஏற்பாட்டில் நடைபெற்ற ஜுன் மாத தொழில் வர்த்தக கூட்டத்தில் சிறப்பு விருந்தினராக, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மதுரை கிளை மேலாளர் திரு. T. ராஜா அவர்கள் கலந்து கொண்டு அரசின் திருத்தப்பட்ட கடன் உதவிகள் மற்றும் மானியங்கள் குறித்துப் பேசுகிறார். இந்தக் கூட்டத்திற்கு சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ் அவர்கள் தலைமைத் தாங்கினார்.




ஜுன் மாத தொழில் வர்த்தக கூட்டத்தில் கௌரவ விருந்தினராக, குவாலியரில் இயங்கும், பிரனவ் மருந்தியல் ஆராய்ச்சி மற்றும் அறிவியல் மையத்தின் முதல்வரும், பேராசிரியருமான டாக்டர். A.K. ஞானசச்ந்திரன் அவர்கள் கலந்து கொண்டு நம் உடல் ஆரோக்கியத்திற்கு மருந்துக்களின் செயல்பாடுகள் குறித்துப் பேசினார்.

# சட்டமன்ற உறுப்பினருக்கு பாராட்டு விழா



மதுரை தெற்கு தொகுதியில் சட்டமன்ற உறுப்பினராக போட்டியிட்டு வெற்றி பெற்ற நம் சமூக மைந்தர் திரு.M.M. கோபிசன் அவர்களுக்கு எஸ்-பேக் மற்றும் அனைத்து ஸௌராஷ்ட்ர சமூக அமைப்புகள் இணைந்து நடத்திய பாராட்டு விழாவில், நமது ஸௌராஷ்ட்ர சேம்பர் ஆப் காமர்ஸ் சார்பாக, வேட்பாளருக்கு நினைவுப் பரிசுகளை வழங்கியும், பொன்னாடை அணிவித்து கௌரவித்து மேற்கொண்ட பொதுப் பணி சிறக்க வாழ்த்தியது. இந்த நிகழ்வில் கலந்து கொண்ட தமிழக மின்சாரத் துறை அமைச்சர் திரு. C.T.R. நிர்மல் குமார், மதுரை கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கார்த்திகேயன் ஆகியோரையும் நமது சேம்பர் பொன்னாடை அணிவித்தும், நினைவுப் பரிசுகள் வழங்கியும் கௌரவித்து வாழ்த்தியது. இந்த நிகழ்வில், ஸௌராஷ்ட்ர சேம்பர் தலைவர் திரு. K.K. தினேஷ்,உடனடி முன்னாள் தலைவர்திரு. T.R. மோகன்ராம், இணைச் செயலாளர் திரு. T.N. சூரியபிரகாஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

# லாப் ஸமாச்சார் இதழ் - அமைச்சர் வெளியீடு

நமது ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் வளாகத்தில் நடைபெற்ற பாராட்டு விழாவிற்கு வருகை தந்திருந்த தமிழக மின்சாரத் துறை அமைச்சர் திரு. C.T.R. நிர்மல் குமார் அவர்களின் கரங்களால் ஸௌராஷ்ட்ர சேம்பர்-ன் லாப் ஸமாச்சார் மே மாத இதழ் வெளியீடு செய்யப்பட்டது. இந்த நிகழ்வில், மதுரை தெற்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. M.M. கோபிசன் அவர்களும், மதுரை கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. கார்த்திகேயன் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த இதழ் வெளியீட்டில். சேம்பர் நிர்வாகிகள் மற்றும் லாப் ஸமாச்சார் இதழ் குழுவினர் உடனிருந்தனர்.







ஜிஎஸ்டி குறை தீர்க்கும் கூட்டத்தில் சேம்பர் சார்பாக ஜிஎஸ்டி குழு சேர்மன் திரு. N.S. பிரேம் குமார் அவர்கள் அதிகாரிகளை சந்தித்து மனு அளிக்கிறார்.

வருமான வரி கூட்டத்தில் சேம்பர் சார்பாக தலைவர் மற்றும் நிர்வாகிகள் கலந்து கொண்டு வருமான வரி தலைமை ஆணையர் அவர்களை கௌரவிக்கிறார்கள்



# நடுத்தர வர்க்கத்தை கடுமையாக பாதிக்கும் எரிபொருள் விலையுயர்வு

எரிபொருள் விலையுயர்வு எப்போதுமே பல துறைகளிலும் அதிர்வலைகளை கடத்தக் கூடியாதகவே இருக்கிறது. நாட்டின் பணவீக்கம் எகிறியுள்ள இந்தச் சூழலில் பெட்ரோல், டீசல் விலை உயர்வு என்பது ஒருமுறை ஏற்றமா அல்லது தொடர் ஏற்றத்தின் தொடக்கமா என்பதுதான் இந்த ஷாக் வேவ் எஃப்கெட் எத்தனை காலம் நீடிக்கும் என்பதை நிர்ணயிக்கும் என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள்.

எரிபொருள் விலையேற்றம் எப்போது நடந்தாலும் FMCG (Fast-Moving Consumer Goods) எனப்படும் வேகமாக நகரும் நுகர்வோர் பொருட்கள் மீதே உடனடித் தாக்கத்தை ஏற்படுத்தும். அந்த வகையில் மக்கள் அதிகம் அடிக்கடி நுகரும் உணவுப் பொருட்கள் விலை உயரும் என்று எச்சரிக்கிறார்கள் நிபுணர்கள்.

ஒரு விரைவுப் பட்டியலை தயார் செய்தால், பெட்ரோல் விலையேற்றத்தால் டூவிலர், கார் பயன்படுத்துவோர் எரிபொருள் செலவு அதிகரிக்கும். டீசல் விலை உயர்வு பொதுமக்களின் பேருந்து போக்குவரத்து, ஆட்டோ, வாடகை கேப், சரக்கு வாகன சேவைகள் செலவை அதிகரிக்கும். ஏறிய விலை இன்னும் ஏறினாலோ அல்லது அதே நிலை நீடித்தாலும் கூட பாதிப்புகள் சாமானியர்களை அதிகம் பதம் பார்க்கப் போவது உறுதி என்கின்றனர் பொருளாதார நிபுணர்கள்.

சரக்கு வாகனக் கட்டணங்கள் கூடும்போது பால், காய்கறி, இறைச்சி, மளிகைப் பொருட்கள் விலையும் அதிகரிக்கும்.

இந்தியாவில் ஏற்கெனவே அமுல், மதர் டெய்ரி போன்ற பால் நிறுவனங்கள் எரிபொருள், போக்குவரத்து விலையேற்றத்தைக் குறிப்பிட்டு பால் விலையை லிட்டருக்கு ரூ.2 வரை உயர்த்தியது குறிப்பிடத்தக்கது.

அதேவேளையில், பொருட்கள் விலையேற்றம் என்பது கள யதார்த்தத்தைப் பிரதிபலிப்பதாகவே இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நுகர்வோர் அதற்கு தங்களை தகவமைக்க மாட்டார்கள். இதனால் பிற்காலத்தில் பற்றாக்குறை, நிதிச் சிக்கல் ஏற்படும். அது மக்களின் வாழ்க்கைத் தரத்தில் எதிரொலிக்கத் தொடங்கும் என்றும் சிலர் விவாதிக்கின்றனர்.

எரிபொருள் விலையேற்றமானது, கிராமப்புறங்களின் இன்னும் கூரான தாக்கமாக இறங்கும். ஏனெனில் விவசாயிகள் டீசல் டிராக்டர் வாகனங்கள், நீரேற்று இயந்திரங்கள், வேளாண் சரக்கு வாகனங்களை அதிகம் சார்ந்துள்ளதால், வேளாண் உற்பத்திச் செலவு அதிகரித்து அது உணவுப் பொருள் விலையில் தாக்கத்தை ஏற்படுத்தும் என்று கூறப்படுகிறது.

**பணவீக்கத்தில் என்ன மாதிரியான தாக்கம்?**

பெட்ரோலும் டீசலும் நமது நுகர்வோர் விலைக் குறையீட்டில் (Consumer Price Index - CPI) 5% மதிப்பைக் கொண்டுள்ளது. இப்போது இந்த எரிபொருள்களின் விலை கிட்டத்தட்ட ரூ.3 ஏற்றம் என்று கொண்டாலும் எரிபொருள் விலையில் 3% உயர்வு என்று அர்த்தம். அப்படியென்றால் CPI-ல் இதன் தாக்கம் 0.15% என்றளவுக்கு இருக்கும். இத்துடன், ஏற்கெனவே உயர்த்தப்பட்ட எல்பிஜி, சிஎன்ஜி விலையையும் சேர்த்தால் இனி வரும் நாட்களில் பணவீக்கத்தில் மேல்நோக்கிய அழுத்தமே இருக்கும் என்று பொருளாதார வல்லுநர்கள் எச்சரிக்கின்றனர்.

இதற்கிடையில், ஐக்கிய அரபு அமீரகத்துக்கு இரண்டு மணி நேர குறுகிய பயணமாகச் சென்ற பிரதமர் மோடி, பெட்ரோலிய இருப்புக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம், எல்பிஜி விநியோகம் தொடர்பான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டுள்ளார்.

**என்ன நினைக்கிறார்கள் நுகர்வோர்?!**

எரிபொருள் விலையேற்றத்தால் பல்வேறு விளைவுகளையும், எதிர்காலத்தில் அது ஏற்படுத்தக் கூடிய தாக்கத்தையும் நிபுணர்கள் பட்டியலிட்டுள்ள நிலையில், நுகர்வோரின் கருத்துகளும் முக்கியமானவை.

டெல்லியைச் சேர்ந்த நுகர்வோர் ஒருவர் பிடிஐ செய்தி நிறுவனத்துக்கு அளித்தப் பேட்டியில், பெட்ரோல், டீசல் விலையுயர்வு, பணவீக்கம் உயர்வு எல்லாம் நிச்சயமாக என்னைப் போன்ற சாமானியர்கள் வாழ்வில் தாக்கத்தை ஏற்படுத்தும். இப்போதைக்கு அரசு ஓரளவு எல்லாவற்றையும் கட்டுக்குள் வைத்திருந்தாலும் என்னைப் போன்றோருக்கு சிறிய ஏற்றமே பெரிய பாதிப்புதான். இந்த விலையேற்றம் இத்துடன் நிற்குமா அல்லது 15 நாட்களுக்கு ஒருமுறை, மாதம் ஒருமுறை என்று ஏறுமா என்று கலக்கமாக இருக்கிறது, என்றார்.

இன்னொரு நபர், ஆங்காங்கே போர்கள் நடக்கின்றன. கச்சா எண்ணெய் விலை உயர்ந்துள்ளது. எண்ணெய் கொள்முதலும் அரசுக்கு சிக்கலாக இருக்கிறது. இந்த நேரத்தில் பிரச்சினையின் ஆணிவேரையும் சேர்த்து பரந்த பார்வையோடு அணுக வேண்டும். நிலையை உணர்ந்து அரசு தீவிர பரிசீலனைக்குப் பின்னரே இந்த விலையேற்றத்தைக் கொண்டு வந்திருக்க வேண்டும். அரசை ஆதரிக்கிறேன், என்றார்.

மொத்தத்தில் இது ஒரு கடினமான காலமாகவே அனைவருக்கும் அமைந்துள்ளது. நாம் மிகுந்த பொறுப்புடன் செயல்பட வேண்டிய கட்டாயம். அரசின் கூறும் அறிவுறுத்தலின்படி பயணிப்பது அவசியம்.


**ஆண்டு சந்தா உறுப்பினர்கள் 2026-27ம் ஆண்டிற்கான சந்தா தொகையை விரைவில் செலுத்தக் கேட்டுக்கொள்கிறோம்**

Kindly send us your Subscription, Donations & Bulletin Advt. to our Bank Account

Name
**Sourashtra Chamber of Commerce**
Bank
**State Bank of India**
Acct. No.
**30134805614**
Branch
**Madurai City**
IFSC
**SBIN0011544**


## திருக்குறள்

**ஒருமை மகளிரே போலப் பெருமையும்**
**தன்னைத்தான் கொண்டொழுகின் உண்டு.**

**பொருள்:** (பெருமை என்பது பிறப்பினால் அடையக்கூடியது அல்லவென்பது மட்டுமின்றிப் பிறருடைய உதவியால் அடையக் கூடியதுமல்ல). பெண்களுடைய கற்பைப்போலவே பெருமை என்பதும், ஒருவன் தானே தன்னுடைய நல்லொழுக்கத்தைக் காத்து நடந்து கொண்டால்தான் உண்டாகும்.

**அதிகாரம் 98 — பெருமை (குற்றமற்ற தன்னம்பிக்கை) — ஒழிபியல்**

# குப்பையில் *எறியப்படும் மரக்கழிவுகள்* இனி 'தங்கம்'

குப்பையில் எறியப்படும் மரக்கழிவுகள் இனி 'தங்கம்'... விஞ்ஞானிகளின் புதிய மின்-வேதியியல் புரட்சி!

மரக்கட்டையிலுள்ள கடினமான 'லிக்னின்' பொருளை வெறும் மின்சாரத்தைப் பயன்படுத்தி மதிப்புமிக்க எரிபொருளாக மாற்றும் புதிய தொழில்நுட்பத்தை விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். புதைபடிவ எரிபொருட்கள் இல்லாத இந்தச் சுற்றுச்சூழல் புரட்சி குறித்து விரிவாகப் பார்ப்போம்.

மரக்கட்டைகள் ஏன் இவ்வளவு உறுதியாக இருக்கின்றன என்று யோசித்திருக்கிறீர்களா? அதற்கு 'லிக்னின்' (Lignin) என்ற ஒரு கடினமான கரிமப் பொருள்தான் காரணம். மரத்தின் எடையில் 25% வரை இருக்கும் இந்த லிக்னின், இதுவரை தொழிற்சாலைகளில் எரிக்கப்படும் அல்லது தூக்கி எறியப்படும் ஒரு கழிவாகவே இருந்து வந்தது. காரணம், இதைப் பிரித்து எடுப்பது அவ்வளவு எளிதல்ல.

இதுவரை லிக்னினை உடைக்க அதிக வெப்பமும், ராட்சத அழுத்தமும், புதைபடிவ எரிபொருட்களும் தேவைப்பட்டன. ஆனால், தென் கொரிய விஞ்ஞானிகள் இப்போது ஒரு 'அறிவியல் மேஜிக்' செய்துள்ளனர். எந்த எரிபொருளும் இல்லாமல், வெறும் மின்சாரத்தைப் (சியிஉமிஷெஷ்உஷ்மிதீ) பயன்படுத்தி லிக்னினை உடைக்கும் வித்தையை அவர்கள் கண்டுபிடித்துள்ளனர். இந்த ஆய்வின் வெற்றிக்குக் காரணம் ஊ /எீ எனும் ஒரு சிறப்பு வினையூக்கி. இது டபுள் ஏஜெண்ட் போல செயல்படுகிறது. லிக்னினின் இரும்பு போன்ற பிணைப்புகளை அணுஅணுவாக உடைக்கிறது. உடைந்த துண்டுகளை பயனுள்ள எரிபொருட்களாகவும் (Cyclohexanol), வேதிப்பொருட்களாகவும் மாற்றுகிறது. இதில் அதிசயம் என்னவென்றால், இதற்குத் தேவையான ஹைட்ரஜனை வெளியிலிருந்து வாங்காமல், நீரிலிருந்து மின்சாரத்தின் மூலம் வினையூக்கியின் மேற்பரப்பிலேயே விஞ்ஞானிகள் உருவாக்கி உள்ளனர்.

மிகக் கடினமான பிணைப்புகளைக் கூட வெறும் 90 நிமிடங்களில் இந்தத் தொழில்நுட்பம் சிதைத்துவிட்டது. சில பிணைப்புகள் வெறும் 30°C (சாதாரண அறை வெப்பநிலை) அளவிலேயே முழுமையாக உடைந்தன. இந்தத் தொழில்நுட்பத்தைச் சுத்தமாக 5 முறை பயன்படுத்தினாலும் அதன் வீரியம் குறையவில்லை. வெறும் சோதனை குழாயோடு நிறுத்தாமல் பிர்ச் வகை மரக்கட்டைகளில் விஞ்ஞானிகள் இதனை சோதித்தனர். ஆரம்பத்தில் 5% மட்டுமே வெற்றி கிடைத்த நிலையில், சில மாற்றங்களுக்குப் பிறகு அது 19.6% ஆக உயர்ந்தது. அதாவது, மரக்கழிவுகளில் இருந்து 20% உயர்தர வேதிப்பொருட்களை இப்போது எடுக்க முடியும்.

இந்தக் கண்டுபிடிப்பு வெறும் அறிவியல் மட்டுமல்ல; இது பொருளாதாரப் புரட்சி. பெட்ரோலியப் பொருட்களுக்குப் பதிலாக, மரக்கழிவுகளில் இருந்து தூய்மையான முறையில் எரிபொருட்களையும், பிளாஸ்டிக் உள்ளிட்ட பொருட்களுக்குத் தேவையான மூலப்பொருட்களையும் தயாரிக்க இது வழிவகுக்கும். குப்பையாகப் போன மரம், இனி மின்சாரத்தின் உதவியால் 'மலிவான மூலப்பொருளாக' மாறப்போகிறது.

# காகிதப் பணத்திற்குப் பதிலாக பாலிமர் ரூபாய் நோட்டுகள் - *இந்திய ரிசர்வ் வங்கி திட்டம்*

இந்திய ரிசர்வ் வங்கி (RBI) காகிதப் பணத்திற்குப் பதிலாக பாலிமர் (பாலிபுராபிலின்) எனப்படும் பிளாஸ்டிக் ரூபாய் நோட்டுகளை அறிமுகப்படுத்த தீவிர திட்டங்களை மேற்கொண்டு வருகிறது.

**பிளாஸ்டிக் கரன்சியின் நன்மைகள்**

- காகிதப் பணத்தை விட இவை அதிக உறுதியுடன் இருக்கும். தண்ணீரில் நனைந்தாலோ, அழுக்கு சேர்ந்தாலோ பாதிக்கப்படாது.
- கள்ளநோட்டுத் தடுப்பு: பிளாஸ்டிக் நோட்டுகளில் சிறப்புப் பாதுகாப்பு அம்சங்கள், ஆப்டிகல் ஹோலோகிராம்கள் (கூஷிலியிலிஆஷெழிதுவி) போன்றவற்றை அச்சிடுவது எளிது. இதனால் கள்ளநோட்டுகளைத் தயாரிப்பது கிட்டத்தட்ட சாத்தியமற்றது.
- பொருளாதாரச் சேமிப்பு: காகித நோட்டுகள் சீக்கிரமே கிழிந்துவிடுவதால் ஆண்டுதோறும் பல ஆயிரம் கோடிகள் (உதாரணமாக 2025-ம் நிதியாண்டில் சுமார் ₹6,372 கோடி நோட்டுகள் அச்சிடச் செலவாகிறது. பிளாஸ்டிக் நோட்டுகளின் நீண்ட ஆயுள் மூலம் இந்த உற்பத்திச் செலவை வெகுவாகக் குறைக்க முடியும்.

**பிளாஸ்டிக் கரன்சியை நோக்கிய நகர்வுக்கான காரணம்**

இந்தியாவில் புழக்கத்தில் உள்ள ரூபாய் நோட்டுகள் அழுக்கடைவதாலும், கிழிந்து போவதாலும் கோடிக்கணக்கான நோட்டுகள் ஒவ்வொரு ஆண்டும் ரிசர்வ் வங்கியால் அழிக்கப்படுகின்றன. காகித நோட்டுகளின் ஆயுட்காலம் மிகக் குறைவு என்பதால், ஆஸ்திரேலியா, கனடா போன்ற பல நாடுகளைப் பின்பற்றி இந்தியாவும் பாலிமர் நோட்டுகளுக்கு மாற முடிவு செய்துள்ளது.

**தற்போதைய அதிகாரப்பூர்வ நிலை** (Current Status): ஆரம்பகட்ட பரிசீலனை: இந்தியாவில் பிளாஸ்டிக் நோட்டுகளை அறிமுகப்படுத்தும் திட்டம் தற்போது ஆரம்பகட்ட ஆய்வில் (Preliminary Stage) மட்டுமே உள்ளது. இதன் சாதக, பாதகங்களை ரிசர்வ் வங்கி தீவிரமாக ஆராய்ந்து வருகிறது. இறுதி முடிவு இன்னும் எட்டப்படவில்லை என்று ஆளுநர் தெளிவுபடுத்தியுள்ளார்.

டிஜிட்டல் பரிவர்த்தனைகள் (UPI) அதிகரித்தபோதிலும், ரொக்கப் பணத்திற்கான தேவை தொடர்ந்து அதிகரித்து வருகிறது. இதனால் காகித நோட்டுகளை அச்சிடும் செலவும் (2025 நிதியாண்டில் சுமார் ₹6,372 கோடி கணிசமாக உயர்ந்துள்ளது.

**அடுத்தகட்ட செயல்பாடுகள்** (Upcoming Actions): முதற்கட்டமாக, பொதுமக்களின் பயன்பாடு மற்றும் ஏடிஎம் (புவீனி) இயந்திரங்களின் இணக்கத்தன்மையை சோதிக்க ₹10 மற்றும் ₹20 நோட்டுகளில் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை மட்டும் பிளாஸ்டிக் நோட்டுகளாக புழக்கத்தில் விட திட்டமிடப்பட்டுள்ளது.

காகித பணத்தை ஒரே நாளில் முற்றிலும் மாற்ற முடியாது. இந்த முன்னோட்ட திட்டத்தின் வெற்றி, பொதுமக்களின் வரவேற்பு மற்றும் செயல்பாட்டு வசதிகளைப் பொறுத்தே நாடு தழுவிய அளவில் இது படிப்படியாக அமல்படுத்தப்படும்.

**மேம்பட்ட பாதுகாப்பு அம்சங்கள்:** புதிய நோட்டுகளில் கள்ள நோட்டுகளை முற்றிலுமாகத் தடுக்கும் வகையில், ஒளி ஊடுருவும் ஜன்னல்கள் (Transparent Windows), நிறம் மாறும் கூறுகள் மற்றும் மைக்ரோ-ஆப்டிக் ஹோலோகிராம்கள் சேர்க்கப்படவுள்ளன. பிளாஸ்டிக் நோட்டுகளுக்கு மாற்று ஏற்பாடாக, தற்போதைய காகித நோட்டுகளின் மேல் ஒரு மெல்லிய பாலிமர் பூச்சு (Varnish Layer) பூசும் சோதனையையும் ரிசர்வ் வங்கி மேற்கொண்டுள்ளது. இது காகித நோட்டுகள் சீக்கிரம் அழுக்கடைவதையும், கிழிவதையும் தடுக்கும்.

# LEAN Production

## மெலிந்த உற்பத்தி முறை என்றால் என்ன? அதன் பொருள், கருவிகள் மற்றும் நுட்பங்கள்

பெரியதோ சிறியதோ, ஒரு வணிகம் தனது செயல்திறனை மேம்படுத்தவும் சிறந்த இலாபங்களை ஈட்டவும் எப்போதும் வாய்ப்புள்ளது. குறிப்பாக ஒரு உற்பத்தி நிறுவனத்தைப் பொறுத்தவரை, எந்தவொரு தேவையற்ற செயல்பாடுகளும் நேரத்தையும் பணத்தையும் வீணடிக்கக் கூடாது. லீன் உற்பத்தி என்பது அத்தகைய வீணான செயல்பாடுகளைத் தவிர்க்கக்கூடிய ஒரு செயல்முறையாகும், இதன் மூலம் அந்த வணிகம் மேம்பட்ட உற்பத்தியை உறுதி செய்ய முடியும்.

**மெலிந்த உற்பத்தி முறை என்றால் என்ன?**

லீன் உற்பத்தி என்பது, பல்வேறு வணிகச் செயல்பாடுகள், குறிப்பாக உற்பத்திச் செயல்பாடுகளில் ஏற்படும் விரயங்களைக் குறைப்பதன் மூலம் ஒரு நிறுவனத்தின் உற்பத்தியை அதிகரிக்கும் ஒரு வணிகச் செயல்முறையாகும்.

மதிப்பைச் சேர்க்காத எந்தவொரு செயல்பாட்டையும் (வணிக விரயம்) நீக்குவதன் மூலம் ஒரு வணிகம் வெற்றி பெற முடியும் என்று சிக்கன உற்பத்திச் செயல்முறை நம்புகிறது. இதன் மூலம், நிறுவனம் கருத்தியல் ரீதியாக சிக்கனமாகிறது, உற்பத்திச் செயல்முறைகள் திறம்படின்றன, மேலும் வணிகம் இலாபகரமானதாகிறது.

சிக்கன உற்பத்தி என்பது சிக்கனத் தயாரிப்பு என்றும் அழைக்கப்படுகிறது. எண்ணற்ற கருவிகள், நுட்பங்கள் மற்றும் கோட்பாடுகள் உற்பத்தி மேம்பாடுகளை வழங்கி, வணிகச் செயல்பாடுகளுக்கும் அதன் மூலம் வாடிக்கையாளர்களுக்கும் மதிப்பைக் கூட்டுகின்றன.

சிக்கன உற்பத்தி முறையானது, ஒரு வணிகத்தில் இதுபோன்ற செயல்திறன் குறைபாடுகள் இல்லாமல் இருப்பதை உறுதிசெய்வதோடு, வணிக விரயங்களை அகற்றுவதன் மூலம் சேமிக்கப்படும் நிதியை வணிக உற்பத்தித்திறனை அதிகரிக்கப் பயன்படுத்துகிறது.

**சிக்கன உற்பத்தி முறை எவ்வாறு செயல்படுகிறது?**

லீன் உற்பத்தி கோட்பாடுகள், உற்பத்தியில் செயல்திறனை அதிகரிப்பதையும் வீண்விரயத்தைக் குறைப்பதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இது குறைந்த வளங்களைப் பயன்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு அதிக மதிப்பை வழங்குவதைப் பற்றியது. குறைபாடுகள், அதிகப்படியான உற்பத்தி, காத்திருப்பு, தேவையற்ற நகர்வுகள், அதிகப்படியான சரக்கு இருப்பு, அதிகப்படியான செயலாக்கம் மற்றும் பயன்படுத்தப்படாத திறமை போன்ற பல்வேறு வகையான வீண்விரயங்களைக் கண்டறிந்து அகற்றுவது இதில் அடங்கும். லீன் உற்பத்தி, தொடர்ச்சியான முன்னேற்றத்தை ஊக்குவிப்பதோடு, சிக்கல்களைத் தீர்ப்பதில் அனைத்து ஊழியர்களையும் ஈடுபடுத்துகிறது. லீன் கோட்பாடுகளைப் பின்பற்றுவதன் மூலம், நிறுவனங்கள் முன்னணி நேரங்களைக் குறைக்கலாம், தரத்தை மேம்படுத்தலாம், உற்பத்தித்திறனை அதிகரிக்கலாம் மற்றும் செலவுகளைக் குறைக்கலாம்.

**சிக்கன உற்பத்தி ஏன் முக்கியமானது?**

இன்றைய வேகமான வணிக உலகில் போட்டித்தன்மையுடன் நிலைத்திருக்க, சிக்கன உற்பத்தி முறை இன்றியமையாதது. இது செயல்திறனை அதிகரித்து, வீணாவதைக் குறைப்பதால், நிறுவனங்கள் குறைந்த செலவில் சிறந்த தயாரிப்புகளை வழங்க முடிகிறது. இது வாடிக்கையாளர்களை ஈர்த்துத் தக்கவைத்துக் கொள்ளும்.

சிக்கன உற்பத்தி என்பது கழிவுகளைக் குறைப்பதையும் தாண்டிச் செல்கிறது. குறுகிய தயாரிப்பு ஆயுட்காலங்களுக்கும், தனிப்பயனாக்கத்திற்கான அதிகரித்து வரும் தேவைக்கும் ஏற்ப வணிகங்கள் தங்களை மாற்றியமைத்துக் கொள்ள இது உதவுகிறது. தொடர்ச்சியான முன்னேற்றம் மற்றும் தழுவலுக்குத் தேவையான சுறுசுறுப்பை சிக்கனக் கொள்கைகள் வழங்குகின்றன. இது ஊழியர்களின் மன உறுதியையும் ஈடுபாட்டையும் மேம்படுத்துகிறது. தொடர்ச்சியான முன்னேற்றத்தில் பங்கேற்கவும், தங்கள் பணிக்கு உரிமையேற்கவும் ஊழியர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படும்போது, அவர்கள் தங்களை மிகவும் மதிப்புமிக்கவர்களாகவும் ஊக்கமுள்ளவர்களாகவும் உணர்கிறார்கள்.

நீண்ட கால நோக்கில், வாடிக்கையாளர்கள், ஊழியர்கள் மற்றும் பங்குதாரர்களுக்கு மதிப்பை உருவாக்குவதன் மூலம், நிறுவனங்கள் வெற்றிபெற சிக்கன உற்பத்தி உதவுகிறது.

**சிக்கன உற்பத்தியின் நன்மைகள்**

லீன் உற்பத்தி முறை உங்கள் வணிகத்தின் செயல்திறனை மேம்படுத்த எவ்வாறு உதவும் என்பது இங்கே:

**கழிவு நீக்கம்:** சிக்கன உற்பத்தி முறையானது, எந்த மதிப்பையும் சேர்க்காத, பயனற்ற மற்றும் வீணான வணிகச் செயல்பாடுகளை நீக்குகிறது.

**மேம்படுத்தப்பட்ட உற்பத்தி:** வீணான செயல்பாடுகள் இல்லாமல், ஒரு நிறுவனம் தனது உற்பத்தி செயல்முறையையும் தயாரிப்புத் தரத்தையும் மேம்படுத்திக்கொள்ள முடியும்.

**செலவுக் குறைப்பு:** சிக்கன உற்பத்தி முறையானது, உற்பத்தி மற்றும் வாடிக்கையாளர் மதிப்புக்கு பங்களிக்காத செயல்பாடுகளுக்கான செலவினங்களை நிறுவனம் குறைப்பதை உறுதி செய்கிறது.

**நேரத்தைச் சேமிக்கும்:** சிக்கன உற்பத்தி முறையை மேற்கொள்வது, திறனற்ற பணி நடைமுறைகளை நீக்குவதன் மூலம் வணிகத்தை நேரத் திறனுள்ளதாக மாற்ற உதவுகிறது.

**நிராகரிப்புகள் மற்றும் குறைபாடுகள்**

சிக்கன உற்பத்தி முறையின் மூலம், உற்பத்திச் செயல்முறை பொருட்களின் ஒட்டுமொத்த தரத்தை மேம்படுத்துவதால், ஒரு நிறுவனம் நிராகரிக்கப்பட்ட மற்றும் குறைபாடுள்ள பொருட்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடியும்.

# சட்டம் – சொல்வது என்ன?

**ஒருவர் வாங்கிய கடனுக்காக அவருடைய குடும்பத்தினர் அல்லது வாரிசுகள் சட்டப்படி பொறுப்பாவார்களா?**

ஒருவர் வாங்கிய கடனுக்காக அவருடைய குடும்பத்தினர் அல்லது வாரிசுகள் தானாகவே சட்டப்படி பொறுப்பாவார்கள் என்ற புரிதல் பொதுமக்களிடையே அதிகமாக உள்ளது. ஆனால், சட்டத்தின் நிலைப்பாடு அதைவிட நுணுக்கமானதாகும்.

பொதுவாக, ஒருவர் வாங்கிய கடன் என்பது அவருடைய தனிப்பட்ட பொறுப்பாகும். அவர் உயிருடன் இருக்கும் வரை, அந்தக் கடனை திருப்பிச் செலுத்த வேண்டியது அவருடைய கடமையாகும். ஆனால் அவர் இறந்த பிறகு, அந்தக் கடன் அவருடைய வாரிசுகளுக்கு நேரடியாக மாற்றப்படாது.

வாரிசுகள் தங்களது தனிப்பட்ட சொத்துக்களை பயன்படுத்தி அந்தக் கடனை அடைக்க வேண்டிய கட்டாயம் இல்லை. எனினும், மறைந்த நபரின் சொத்துகளை (estate) வாரிசுகள் பெற்றிருந்தால், அந்தச் சொத்துகளின் மதிப்பிற்குள் மட்டுமே கடனைத் தீர்க்க வேண்டிய பொறுப்பு அவர்களுக்கு உண்டு.

இதுவே “estate liability” என்ற சட்டக் கோட்பாடு ஆகும். மேலும், வாரிசுகள் கடனுக்கு உத்தரவாதம் (guarantor) அளித்திருந்தால் அல்லது அவர்கள் கூட்டாக கடன் வாங்கியிருந்தால், அப்போது அவர்கள் தனிப்பட்ட முறையிலும் பொறுப்புக்குட்படுவார்கள்.

ஆகவே, வாரிசுகள் அனைத்து சூழ்நிலைகளிலும் கடனைச் செலுத்த வேண்டிய அவசியம் இல்லை; அவர்கள் பெற்ற சொத்துகளின் வரம்புக்குள் மட்டுமே பொறுப்பு ஏற்படும் என்பது முக்கியமான சட்ட நிலைப்பாடாகும்.

## பருத்தி இறக்குமதி மீதான சுங்க வரியை முழுமையாக ரத்து செய்து மத்திய அரசு உத்தரவிட்டுள்ளது

இறக்குமதி செய்யப்படும் பருத்திக்கு விதிக்கப்படும் சுங்க வரி மற்றும் ‘வேளாண் உள்கட்டமைப்பு மேம்பாட்டுக் கட்டணம்‘ (Agriculture Infrastructure and Development Cess) ஆகியவற்றில் இருந்து முழு விலக்கு அளிக்கப்படும். இந்த வரி ரத்து நடவடிக்கையானது, வரும் ஜூன் 1 முதல் அக்டோபர் 31 வரை அமலில் இருக்கும்.

இந்திய ஜவுளித் துறைக்கான பருத்தி இருப்பை அதிகரிக்கும் நோக்கத்தில் இந்த வரிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தற்காலிக வரி விலக்கு ஜவுளி மற்றும் ஆடைத் துறையில் பெருமளவில் மூலதன செலவுகளைக் குறைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் உற்பத்தியாளர்களுக்கும், நுகர்வோருக்கும் லாபம் கிடைக்கும். மேலும், உள்நாட்டு விவசாயிகளின் நலன்களும் கருத்தில் கொள்ளப்படும்.

மொத்தத்தில், இந்த நடவடிக்கை உள்நாட்டு ஜவுளித் துறையில் ஈடுபட்டிருக்கும் சிறு, குறு நிறுவனங்களுக்கு பயனுள்ளதாக அமையும் என்றும், சந்தையில் பருத்தியின் கையிருப்பை உறுதி செய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, பருத்தி மீது 11 சதவீதம் இறக்குமதி வரி விதிக்கப்பட்டு வந்தது குறிப்பிடத்தக்கது.

இந்திய அரசு 2026 ஜுன் 1 முதல் 2026 அக்டோபர் 31 வரை பருத்தி இறக்குமதி மீதான 11% வரியை தற்காலிகமாக நீக்கியுள்ளது. பருத்தி தட்டுப்பாட்டை போக்கவும், ஜவுளித்துறையை ஊக்குவிக்கவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**வாடகைதாரர் ஒருவரை வீட்டைக் காலி செய்யச் சொல்லும்போது வீட்டு உரிமையாளர் பின்பற்ற வேண்டிய சட்ட நடைமுறைகள் யாவை?**

ஒரு வாடகைதாரரை வீட்டை காலி செய்யச் சொல்லும்போது, வீட்டு உரிமையாளர் அவரை நேரடியாகவோ அல்லது வலுக்கட்டாயமாகவோ வெளியேற்ற முடியாது என்பது சட்டத்தின் தெளிவான நிலைப்பாடாகும். இது சட்டத்தால் பாதுகாக்கப்படும் உரிமையாகும்.

முதலில், வாடகை ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகளின் அடிப்படையில் உரிய சட்ட நோட்டீஸ் வழங்கப்பட வேண்டும். பொதுவாக, Transfer of Property Act, 1882-இன் பிரிவு 106 படி, குறைந்தது 15 நாட்கள் முன் நோட்டீஸ் வழங்கப்பட வேண்டும் (ஒப்பந்தத்தின் தன்மைக்கு ஏற்ப கால அவகாசம் மாறுபடலாம்).

அதன்பிறகும் வாடகைதாரர் வீட்டை காலி செய்ய மறுத்தால், உரிமையாளர் நீதிமன்றத்தில் eviction suit தாக்கல் செய்ய வேண்டியது அவசியம். மேலும், தமிழ்நாட்டில், தமிழ்நாடு நில உரிமையாளர்கள் மற்றும் குத்தகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் சட்டம், 2017 (TNRRRLT Act) அமலில் உள்ளது.

இச்சட்டத்தின் கீழ், landlord மற்றும் tenant ஆகியோரின் உரிமைகள் மற்றும் கடமைகள் தெளிவாக வரையறுக்கப்பட்டுள்ளன. இந்தச் சட்டத்தின் படி ரெண்ட் அதாரட்டி முன் மனு தாக்கல் செய்து eviction பெறலாம்.

குறிப்பாக, வாடகைதாரர் வாடகை செலுத்தாமல் இருப்பது, ஒப்பந்த விதிமுறைகளை மீறுவது, அல்லது landlord-க்கு சொந்த பயன்பாட்டிற்காக வீடு தேவையாக இருப்பது போன்ற காரணங்களின் அடிப்படையில் வெளியேற்றம் கோரலாம்.

மேலும், tenancy agreement பதிவு செய்யப்பட்டிருக்க வேண்டும் என்பதும் இந்தச் சட்டத்தின் முக்கிய அம்சமாகும். ஆகவே, வாடகைதாரரை வெளியேற்றும் போது சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளைப் பின்பற்றுவது கட்டாயமாகும்

**தற்போதைய வரி விவரம்** (வழக்கமான காலங்களில்)

இந்த தற்காலிக விலக்கு இல்லாத காலங்களில், வெளிநாட்டு பருத்தி இறக்குமதிக்கு மொத்தம் 11% வரி விதிக்கப்படுகிறது:

- அடிப்படை சுங்க வரி (BCD): 5%
- விவசாய உள்கட்டமைப்பு மற்றும் மேம்பாட்டு வரி (AIDC): 5%
- சமூக நல கூடுதல் கட்டணம் (SWS): 1% (வரி மீதான 10% கணக்கீடு)

**வரி விலக்கிற்கான முக்கிய காரணங்கள்**

- உற்பத்தி செலவை குறைத்தல்: உள்நாட்டில் பருத்தி விலை உயர்வை கட்டுப்படுத்தி, நூல் உற்பத்தி செலவை குறைக்க இது உதவுகிறது
- ஏற்றுமதி போட்டி: வங்கதேசம், வியட்நாம் போன்ற நாடுகளுடன் சர்வதேச சந்தையில் இந்திய ஜவுளித்துறை போட்டியிட இது வழிவகுக்கிறது.
- சிறு தொழில்கள் பாதுகாப்பு: சிறு, குறு மற்றும் நடுத்தர நெசவுத் தொழிலாளர்களின் லாப வரம்பை உயர்த்த இது உதவுகிறது.

2022 ஆம் ஆண்டு விலக்கு: உள்நாட்டில் பருத்தி விலை வரலாறு காணாத அளவிற்கு உயர்ந்தபோது, ஏப்ரல் 14, 2022 முதல் அக்டோபர் 31, 2022 வரை பருத்தி இறக்குமதி மீதான 11% வரி முழுமையாக நீக்கப்பட்டது.ஆஃப்-சீசன் தற்காலிக விலக்குகள்: பொதுவாக இந்தியாவில் பருத்தி வரத்து குறையும் ஆஃப்-சீசன் (ஜூன் முதல் அக்டோபர் வரை) காலங்களில், ஜவுளி மில்களின் உற்பத்தி பாதிக்கப்படாமல் இருக்க இந்த 5 மாத வரி விலக்கு நீட்டிக்கப்படுகிறது.

# ஸ்மார்ட் புரதம் (Smart Protein)

## ஊட்டச்சத்துப் பற்றாக்குறை நீங்க உணவு சந்தையில் உருவாகும் பரிமாண வளர்ச்சியும் தொழில் வாய்ப்புகளும்

கடந்த 20 ஆண்டுகளில் உலக அளவில் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டோர் அதிகம் கொண்ட நாடுகளில் இந்தியா இன்னும் முதலிடத்தில் உள்ளது. ஊட்டச்சத்துப் பற்றாக்குறை ஒரு புறம் இருக்க, இன்னொரு புறம் இந்தியாவில் உள்ள குழந்தைகள், 18 வயதைக் கடந்தவர்களில் அதிகமானோர் உடல் பருமன் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்கிற தரவுகள் கவலை அளிக்கின்றன.

ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கம், குறைந்த உடல் உழைப்பு போன்றவை உடல் பருமனுக்கு முக்கியக் காரணிகள். மேலோட்டமாகப் பார்க்கும்போது இவை வெவ்வேறு பிரச்சினைகளைப் போலத் தோன்றினாலும், ஊட்டச்சத்தான உணவை உட்கொள்வதில்லை என்பது தான் அடிப்படைப் பிரச்சினை.

சத்தான உணவு கிடைக்காததால் ஊட்டச்சத்துப் பற்றாக்குறையும், ஆரோக்கியமற்ற உணவு வகைகளை அளவுக்கு அதிகமாக உட்கொள்வதால் உடல் பருமன் பாதிப்பும் அதிக அளவில் இருப்பதால், இரண்டும் சரிசெய்யப்பட வேண்டிய முக்கியப் பிரச்சினைகள் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

### ஆரோக்கியமான உணவு எது?

இந்தியாவைப் பொறுத்தவரை அரிசி, கோதுமை, மாவு உணவு வகைகளைப் போன்று கலோரி நிறைந்த உணவே அதிகம் உட்கொள்ளப்படுகிறது. இரும்புச்சத்து, புரதச்சத்து, கால்சியம், விட்டமின் போன்று அத்தியாவசிய ஊட்டச்சத்துகள் (Essential nutrients) நிறைந்த உணவு வகைகளை உட்கொள்ளும் பழக்கம் இந்தியர்களிடம் குறைவு.

இதனால் ஊட்டச்சத்து நிறைந்த சமூகமாக மாறுவதில் இந்தியா சிக்கலை எதிர்கொண்டுள்ளது. இந்நிலையில், மாறும் வாழ்க்கை முறைக்கு ஏற்ப அறிவியல் சார்ந்த தீர்வுகளை வகுக்க வேண்டிய கட்டாயத்தில் இந்தியா இருக்கிறது.

ஸ்மார்ட் புரதங்களும் (Smart proteins), அதிகப் பயன்தரும் உணவு வகைகளும் (Functional foods) இந்தப் பிரச்சினைகளுக்கான புதிய தீர்வாகச் சொல்லப்படுகின்றன. அதாவது, சத்துக்கள் செறிவூட்டப்பட்ட பொருள்களைத் தினசரி உணவில் சேர்த்துக்கொள்ளுதல்.

இரும்புச் சத்து, விட்டமின், ஃபோலிக் அமிலம் நிறைந்த அரிசி, மாவு வகைகள், சத்து நிறைந்த பால் வகைகள் என இந்தியர்களின் உணவுப் பழக்கத்துக்கு ஏற்பச் செறிவூட்டப்பட்டவை எல்லாம் செயல்பாட்டு உணவு வகைகள் எனப்படுகின்றன.

ஸ்மார்ட் புரதம் (Smart Protein) என்பது அதிநவீன உயிரித் தொழில்நுட்பம் (Biotechnology) மூலம் விலங்கினங்களுக்குப் பாதிப்பில்லாமல் தயாரிக்கப்படும் மாற்றுப் புரத உணவாகும் (Alternative Protein). பாரம்பரியக் கால்நடை வளர்ப்பிற்கு மாற்றாக, சுற்றுச்சூழலைப் பாதுகாக்கவும் வளர்ந்து வரும் மக்கள் தொகையின் ஊட்டச்சத்துத் தேவையைப் பூர்த்தி செய்யவும் இது உருவாக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டில் இந்திய அரசு அறிமுகப்படுத்திய BioE3 (Biotechnology for Economy, Environment & Employment) கொள்கையின் கீழ் இந்த ஸ்மார்ட் புரதத் துறை ஒரு முக்கிய அங்கமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

### ஸ்மார்ட் புரதத்தின் முக்கிய வகைகள்

ஸ்மார்ட் புரதங்கள் முக்கியமாக மூன்று வழிகளில் தயாரிக்கப்படுகின்றன:

- **தாவர அடிப்படையிலான புரதங்கள்** (Plant-based): சோயா, பட்டாணி, தினை மற்றும் பருப்பு வகைகளிலிருந்து இறைச்சி, பால் மற்றும் முட்டை போன்ற சுவையிலும் வடிவத்திலும் தயாரிக்கப்படும் உணவுகள்.
- **நொதித்தல் முறை புரதங்கள்** (Fermentation-derived): பூஞ்சை (Fungi), பாசி (Algae) மற்றும் நுண்ணுயிரிகளை நொதித்தல் தொழில்நுட்பத்திற்கு உட்படுத்தி உயர்தரப் புரதம் பெறப்படுகிறது.
- **வளர்ப்பு இறைச்சி** (Cultivated Meat): விலங்குகளைக் கொல்லாமல், அவற்றின் ஸ்டெம் செல்களை (Stem Cells) ஆய்வகங்களில் வளர்த்து உண்மையான இறைச்சி உருவாக்கப்படுகிறது.

### இதன் முக்கிய நன்மைகள்

- பாரம்பரிய கால்நடை வளர்ப்பை விட மிகக் குறைந்த நிலம் மற்றும் நீர் மட்டுமே தேவைப்படுகிறது. பசுமை இல்ல வாயு (Greenhouse gases) உமிழ்வைக் குறைக்கிறது.
- விலங்குகளைத் துன்புறுத்தாமல் உண்மையான இறைச்சி மற்றும் பாலின் சுவையை வழங்குகிறது.
- இதில் கொலஸ்ட்ரால் மற்றும் தேவையற்ற கொழுப்புகள் குறைவாக இருக்கும். மேலும், ஆன்டிபயாடிக் எதிர்ப்பு (Antibiotic resistance) போன்ற ஆபத்துகள் இல்லை.

### சந்தையில் கிடைக்கும் தயாரிப்புகள்

இந்தியாவில் GFI India (The Good Food Institute) போன்ற அமைப்புகள் இந்தத் துறையை ஊக்குவித்து வருகின்றன. சந்தையில் டாடா (Tata), ஐடிசி (ITC) போன்ற பெரிய நிறுவனங்களும், பல ஸ்டார்ட்அப்-களும் தாவர அடிப்படையிலான கபாப், பிரியாணி, தினைப்



பால் போன்ற 400-க்கும் மேற்பட்ட ஸ்மார்ட் புரதப் பொருட்களை விற்பனை செய்கின்றன. தற்போது 70க்கும் அதிகமான ஸ்மார்ட் புரதங்களைத் தயாரிக்கும் தனியார் ஸ்டார்ட்-அப் நிறுவனங்கள் இந்தியாவில் இயங்கிவருகின்றன.

இதன் மூலம் செயல்பாட்டு உணவு வகைகள், ஸ்மார்ட் புரதங்கள் தயாரிப்பு ஆகியவை இந்தியாவில் வேகமாக வளர்ந்துவருகின்றன.

அதேவேளையில், இந்தப் புதிய தயாரிப்பு முறைகளுக்காக இந்திய உணவுப் பாதுகாப்பு - தர நிர்ணய ஆணையம் (FSSAI) நிர்ணயிக்க வேண்டிய விதிமுறைகள், சான்றிதழ்கள் குறித்துத் தெளிவான தகவல்கள் இல்லை.

ஊட்டச்சத்துப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான முன்னெடுப்புகள் காலத்தின் தேவையாகவும் இந்தியாவுக்கான மிகப் பெரிய சவாலாகவும் உள்ளன. பாரம்பரிய உணவு முறைகளுக்குப் பழக்கப்பட்டுள்ள இந்தியர்கள், ஆரோக்கியமானது என்று சொன்னாலும்கூட ஆய்வகங்களில் வளர்க்கப்படும் உணவை ஏற்றுக்கொள்ள வெகு காலம் ஆகும் என்பதுதான் கள நிலவரம்.

இயற்கையான உணவு வகைகளையே பெரும்பாலும் விரும்பும் இந்திய வாழ்க்கை முறைக்கு முன்பு இந்தத் தொழில்நுட்பப் புதுமைகள் குறித்து விழிப்புணர்வும் புரிதலும் ஏற்படுத்த வேண்டிய முக்கியப் பொறுப்பும் அரசுக்கு இருக்கிறது.

### ஸ்டார்ட்அப் மற்றும் தொழில்முனைவோர் வாய்ப்புகள்

இந்தத் துறையில் ஸ்டார்ட்அப் தொடங்க விரும்புவோருக்குப் பல வழிகளில் வணிக வாய்ப்புகள் உள்ளன:

- மூலப்பொருள் உற்பத்தி (B2B Ingredient Supply): சோயா, பட்டாணி மற்றும் உள்நாட்டுத் திணைகளில் (Millets) இருந்து அதிகச் செறிவுள்ள புரதப் பொடிகளைத் தயாரித்து பெரிய நிறுவனங்களுக்கு வழங்குதல்.
- தாவர அடிப்படையிலான உணவு பிராண்டுகள் (D2C Brands): சைவர்களுக்கான இறைச்சி மாற்றுகள் (Plant-based meat - நக்கெட்ஸ், கபாப்), தாவரப் பால் (Vegan Milk – ஓட்ஸ் பால், பாதாம் பால்) போன்ற நுகர்வோர் தயாரிப்புகளை அறிமுகப்படுத்துதல்.
- உயிர்ச் செயலாக்க வசதிகள் (Biomanufacturing Hubs): மற்ற நிறுவனங்களின் தயாரிப்புகளைப் பெரிய அளவில் உற்பத்தி செய்து கொடுக்கும் ஒப்பந்த உற்பத்தி (Contract Manufacturing / Co-packing) வசதிகளை ஏற்படுத்துதல்.

### இந்தியாவின் தற்போதைய வேலைவாய்ப்புச் சூழல்

- இந்தியாவில் NABI (National Agri-Food Biotechnology Institute, Mohali) மற்றும் DBT (Department of Biotechnology) போன்ற முன்னணி அரசு நிறுவனங்கள் இந்தத் துறையில் ஆராய்ச்சி செய்ய நிதி மற்றும் ஜூனியர் ரிசர்ச் ஃபெலோ (JRF) போன்ற வேலைவாய்ப்புகளை வழங்குகின்றன.
- டாடா (Tata), ஐடிசி (ITC) மற்றும் லிசியஸ் (Licious) போன்ற நிறுவனங்களும், பல முன்னணி பயோடெக் ஸ்டார்ட்அப்களும் 'ஃபார்முலேஷன் சயின்டிஸ்ட்' (Formulation Scientist), 'புரொடக்ஷன் மேனேஜர்' போன்ற பணிகளுக்குத் தகுதியானவர்களைத் தேடி வருகின்றன.

இந்தியாவில் இந்தத் துறை 2030 ஆம் ஆண்டிற்குள் சுமார் 4 லட்சம் வேலைவாய்ப்புகளை உருவாக்கும் இலக்குடன் வேகமாக வளர்ந்து வருகிறது. இந்திய அரசு BioE3 கொள்கைக்காக ₹10,579 கோடிக்கும் அதிகமான நிதியை ஒதுக்கியுள்ளது.

### சமீபத்திய உள்கட்டமைப்பு மற்றும் திட்ட நிதி (2026 நிலவரப்படி)

- பயோஃபவுண்டரி மையம் (BioFoundry Centre): மொஹாலியில் உள்ள தேசிய வேளாண் உணவு உயிரித் தொழில்நுட்ப நிறுவனத்தில் (NABI) ஸ்மார்ட் புரத ஆராய்ச்சிக்காக மட்டும் ₹42 கோடி ($4.5 மில்லியன்) மதிப்பீட்டில் புதிய பயோஃபவுண்டரி மையம் கட்டப்பட்டு வருகிறது. இது ஆய்வக ஆராய்ச்சிகளைப் பெரிய தொழிற்சாலை அளவில் மாற்றுவதற்கு உதவும்.
- BIRAC-BioNest இன்குபேட்டர்: மைசூரில் உள்ள புகழ்பெற்ற சி.எஸ்.ஐ.ஆர்-சி.எஃப்.டி.ஆர்.ஐ (CSIR-CFTRI) வளாகத்தில் புதிய இன்குபேஷன் மையம் தொடங்கப்பட்டுள்ளது. இது துல்லிய நொதித்தல் (Precision Fermentation) மற்றும் ஸ்மார்ட் புரதத் துறையில் உள்ள ஸ்டார்ட்அப்களுக்குத் தேவையான நிதி மற்றும் உள்கட்டமைப்பை வழங்கும். ன்1தி

### ஆராய்ச்சியாளர்கள் மற்றும் ஸ்டார்ட்அப்களுக்கான அரசு மானியங்கள்

- BIRAC ஆராய்ச்சி நிதியுதவி (Call for Proposals): மத்திய பயோடெக்னாலஜி துறை (DBT) மற்றும் BIRAC அமைப்பு இணைந்து தாவர அடிப்படையிலான மற்றும் வளர்ப்பு இறைச்சி (Cultivated Meat) தொழில்நுட்பங்களை உருவாக்கும் விஞ்ஞானிகளுக்கும் நிறுவனங்களுக்கும் நேரடி ஆராய்ச்சி மானியங்களை (Grants) வழங்கி வருகின்றன.
- TDB நிதியுதவி: சமீபத்தில், மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் கீழ் உள்ள 'தொழில்நுட்ப மேம்பாட்டு வாரியம்' (TDB) மூலமாக, பூச்சிகளிலிருந்து ஸ்மார்ட் புரதம் தயாரிக்கும் ஒரு ஸ்டார்ட்அப் நிறுவனத்தின் வணிக உற்பத்திக்கு நேரடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது.
- D.E.S.I.G.N. ஃபார் BioE3 சேலஞ்ச்: இளம் மாணவர்கள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் புத்தாக்க யோசனைகளுக்கு நிதியுதவி அளிப்பதற்காக அரசாங்கம் இந்த பிரத்யேகப் போட்டிகளையும் நடத்தி வருகிறது.

இந்திய அரசு இந்தத் துறையை ஒரு புதிய தொழில் புரட்சியாகப் பார்ப்பதால், இதற்கான உள்கட்டமைப்பு, கல்வி நிறுவனங்களின் ஆராய்ச்சி மற்றும் ஸ்டார்ட்அப்களுக்குத் தேவையான நிதி உதவிகளைத் தொடர்ந்து வழங்கி வருகிறது.




சிந்தையைக் கவரும்

# தந்தையர் தினம்


*தந்தை ஒரு விந்தை*






ஜூன் மாதத்தில் மூன்றாம் ஞாயிறு அன்று தந்தையர்தினம் பல தசாப்தங்களாக தடபுடலாக கொண்டாடப்பட்டு வருகிறது. இம்முறை அந்த நன்னாள் ஜூன் 21ஆம் தேதி, யோகா தினத்தன்று பொருத்தமாக அமைந்திருக்கிறது. இது தந்தையின்பால் அன்பைப் பொழியும் செல்வங்கள், யோகம் செய்தவர்கள் என்பதன் வெளிப்பாடே!.






மந்திரங்கள் புனிதமானவை ஆகும். தந்தையின் சொற்களை மந்திரங்களுக்கு உவமையாக சொல்லப்பட்டு இருப்பதிலிருந்தே அவற்றின் முக்கியத்துவம் உணர முடிகிறது. தியாகத்தின் திருவுருவம் தந்தை என்றால் அது மிகையாகாது. அவர் உழைப்பின் உன்னத உதாரணம். உதிரத்தை உதிர்த்து வாரிசுகளின் வாழ்வாதாரத்தை உயர்த்துவதில் உள்ளது அவரது உயிர்ப்பு.

யுகத்திற்கு ஒன்று, இரண்டு என்று மொத்தமாக திருமாலுக்கு பத்து அவதாரம் தான். எனினும் ஒரு தந்தைக்கோ ஒரே பிறவியில் அரிதாரம் பூசாமலேயே பத்துக்கு மேல் அவதாரம். மகன் பிறந்தவுடன் அவனின் நலன்விரும்பும் பிதாவாக, அவனே தோளுக்கு மேல் வளர்ந்துவிட்டால், அவனுக்கே தோழனாக, சில வேளைகளில் பங்காளியாக, பகையாளியாக கூட சித்தரிக்கப்படுபவராக; மகள் என்று வாய்த்தவுடன் முதலில் அவளின் (Role Model) முன்மாதிரியாக, பிறகு முதுமையில், அவளுக்கே குழந்தை என்று மறுசுழற்சியாக!! வளர்பருவத்தில், புரிதலின் ஆரம்ப நிலையில் ஏற்படும் தடுமாற்றம் காரணமாக, பிள்ளைகளுக்கு வில்லனாக தவறாக கணிக்கப்படும் தந்தை, அவர்களின் மனமுதிர்ச்சிக்குப் பின், கதாநாயகனாக காட்சி தருவது, தேசத் தந்தையின் வாரிசுகளை கூட விட்டு வைக்கவில்லையே!




குடும்பபாரத்தை சுமக்கும் நிலையில், அவரது கண்டிப்பு அவரை அன்யோன்யத்தில் இருந்து அன்னியமாக்கிவிடுகிறது. படிப்பு விஷயத்தில், பிள்ளைகளிடம் அதட்டும் ஆசிரியராக, ஒழுக்கத்தைப் பேணும் வகையில் காவல்துறை அதிகாரியாக, பொழுதுபோக்கு மற்றும் உல்லாச பயணங்களில் சிறந்த வழிகாட்டியாக, சகாவாக, நமக்கு பாதை வகுத்துக் கொடுப்பதில் அவருக்கு நிகர் அவரே. தமது இன்னல்கள், அவமானங்கள், சிரமங்கள், தடைகள் போன்ற பல எதிர்மறை சூழ்நிலைகளை தனிஒருவனாக சந்தித்து, சமாளித்து அவைகளை நம்மிடம் காட்டிக் கொள்ளாதவண்ணம் சாதாரணமாகக் கடந்து செல்லும் விதத்தில், அவர் ஓர் அதிசய பிறவி.



தமக்கான செலவுகளில் கஞ்சத்தனமும், குடும்பத்திற்கு செலவு செய்வதில் தாராளகுணமும் அவரின் தன்னலமற்ற தன்மைக்கு ஓர் எடுத்துக்காட்டு எனலாம். குடும்பத்தின் முன்னேற்றத்திற்காக ஒன்றன்பின் ஒன்றாக அவருள் உருவெடுக்கும் **தாகம்**, அவற்றை தீர்க்க தமது அடிப்படைத் தேவைகளைக்கூட நிராகரிக்கும் அவரின் **தேகம்**, தமக்குக் கிட்டாத வசதியான வாழ்க்கையை தன் குலக்கொழுந்துகளுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற **வேகம்**, இவற்றாலேயே இவர் வாழ்க்கைப்பயிர் செழிக்க வைக்கும் மழை **மேகம்**.





புதுமைப்பெண் பற்றி விலாவாரியாக கனவு கண்ட பாரதி, தமது ஒரு கவிதையில் **தந்தையர் நாடெனும் போதினிலே** என்று வித்தியாசமாக முழங்கி இருப்பார். இவ்வாறு தந்தையர் இனத்தை பெருமைபடுத்தியுள்ளார்.



பிள்ளைகள் தந்தைக்கு நன்றிக்கடன்பட்டிருப்பதாக உண்மையிலேயே கருதினால், ஒவ்வொரு மகனும் அவனது தந்தைக்கு Son ஆக மட்டுமல்லாது அவருக்கு விடியல் தரும் Sun ஆகவும் பரிமாணிக்க வேண்டும். மகள் என்பவள் வெறும் Daughter ஆக இல்லாமல் உடல், மனம், ஆத்மா ஆகியவற்றின் நோய் தீர்க்கும் Doctor என திகழ வேண்டும். இதுவே தந்தையர் தினத்தில் எல்லோரும் ஏற்க வேண்டிய சூளுரை.



**வாழ்க தந்தை குலம்.**

– *வீரஜா*

# மக்கள் தொடர்பின் மகத்துவம்

மக்கள் தொடர்பு என்கிற சொல்லாட்சி Public Relations ஆங்கில சொல்லுக்கு இணையான சொல்லாக புழக்கத்தில் இருந்து வருகிறது. மக்களுடன் தொடர்பு என்று அப்படியே பொருள் கொள்வது சரியே ஆனாலும் முழுமையான பொருள் ஆகாது.

நீங்கள் சமுதாயத்தில், வர்த்தகத்தில், தொழில் இடத்தில் அன்றாடம் எதிர்கொள்ளும் நபர்களுடன் பழகும் விதம் மற்றும் அணுகுமுறை ஆகியவையே மக்கள் தொடர்பு என்னும் PR பண்பு ஆகும். மிகப் பெரிய மனிதர்களில் சிலர் லிப்ட் இயக்குபவர். சாதாரண ஊழியர்கள், கீழ்நிலை பணியாளர்கள் ஆகியோருக்கு நன்றி சொல்வார்கள். இது காரியம் சாதிக்கும் உத்திகளில் ஒன்றாக நமக்குத் தோன்றலாம். காரியம் ஆக வேண்டிய நேரத்தில் ஒரு விதமாகவும் மற்ற சமயங்களில் அலட்சியமாகவும் சிலருடைய போக்கு இருக்கும். அது PR பண்பு ஆகாது.

நீங்கள் எந்த மனநிலையில், சிக்கலில் இருந்தாலும் மலர்ந்த முகத்துடன் எதிர் வருபவரை எதிர் கொண்டால் அதுதான் PR பண்பு. புதிய இடங்களில் கூட, மொழி புரியாதவர்கள் இடையே சிலர் தங்களுக்குத் தேவையான தகவல் பெறுவதற்கு / வழிமுறை அறிந்து கொள்ள இந்த PR பண்பு உறுதுணை புரிகிறது.

உங்களுக்குள் உள்ள கூச்சத்தை உடைத்துக் கொண்டால் இந்த பண்பை நாம் வளர்த்துக் கொள்ள முடியும். அதற்காக, Loose talk என்கிற வகையில் தொடர்பில்லாத, எதிராளி சங்கோஜப்படுகிற வகையில் பேச்சைத் தொடங்குவதற்கோ வளர்ப்பதற்கோ பேசி விடக்கூடாது.

இன்றைய காலகட்டத்தில், ஒருவருடைய தனிநபர் பற்றிய தனிப்பட்ட விஷயங்களைப் பற்றி கேள்விகள் கேட்டு துளைப்பது அநாகரிகம். வாழ்க்கையில் எல்லோருக்கும் ஒரே விதமாக அமைந்து விடுவதில்லை. சாதி. மத, இன வேறுபாடுகளைக் கடந்து உங்களுக்கு காண்டாக்ட் என்னும் சொத்து கிடைக்க PR பண்பு நலன் மிகவும் இன்றியமையாதது.

அடுத்தவருக்கு ஆயிரம் பணி இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு நேரத்தின் அருமை உணர்ந்து பேசுவதுதான் உங்களுக்கும் நல்லது அவர்களுக்கும் நல்லது. நீங்கள் PR person என்பதை உங்களுடைய நேர நிர்வாக குணம் சுட்டிக்காட்டும். இதனை அந்தக் காலத்தில் திருவள்ளுவர், **சொலல் வலன் சோர்விலன்** என்று நமக்கு சொல்லிக் கொடுத்தார். நமது முன்னோர் கூறிய இங்கிதம் என்கிற சொல்லாட்சியும் PR பண்பின் ஒரு கூறு எனலாம்.

**PR பண்பு வெளிப்படும் சூழல்கள்:** ஆங்கிலத்தில் over the phone, in writing across the table என்று முன்பெல்லாம் குறிப்பிடுவார்கள். இன்று டிஜிட்டல் யுகம். ஆதலால், சமூக ஊடகங்கள், மின் அஞ்சல் வாயிலாக தகவல்களை அனுப்பும் போது தெளிவுடனும் இரத்தினச் சுருக்கமாகவும் செய்தி பகிர்ந்து கொள்ளும் முறையில் உங்கள் PR பண்பை கைக்கொள்ள வேண்டியது அவசியம். PR அணுகுமுறைகளைப் பொறுத்தே உங்கள் காண்டாக்ட்ஸ் அமையும். அதுவே உங்கள் சுயதொழில் வர்த்தகம் மற்றும் உத்யோக வாழ்வில் நீங்கள் வெற்றிகளை நோக்கி பயணிக்க உதவும்.

**மக்கள் தொடர்புத் துறை:** பெரும் கார்ப்பரேட் நிறுவனங்களிலும் அரசுத்துறை நிறுவனங்களிலும் பொதுத்துறை நிறுவனங்களிலும் மக்கள் தொடர்பு இயக்குநர். மக்கள் தொடர்பு அதிகாரி என்றெல்லாம் இருப்பார்கள். தனியாக மக்கள் தொடர்புத்துறையும் இருக்கும். ஊடகங்கள். விளம்பர ஏஜென்சிகள் உடன் பணிகளுக்காக தொடர்பு கொள்வது உள்ளிட்ட பல்வேறு பணிகள் இவர்கள் பொறுப்பு. தங்கள் நிறுவனம் பற்றிய தவறான தகவல், எதிரான தகவல் வந்தால் அது குறித்த மறுப்புரைகளை வெளியிடச் செய்வதும் அவர்கள் பொறுப்பு.

**PR ஏஜென்சிகள்:** விளம்பரங்கள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு தங்கள் தயாரிப்பு சேவையை கொண்டு செல்ல விளம்பர ஏஜென்சிகளை வர்த்தகர்கள் / தொழிலதிபர்கள் பயன்படுத்தி வந்த நிலையில் தொண்ணூறுகளில் PR ஏஜென்சிகள் தோன்றின. இவை ஊடகங்களில் செய்திகள் வடிவில் தயாரிப்புகள் பற்றிய விவரத்தைக் கொண்டு சென்றன.

ஊடகங்கள் சந்திப்பு நிகழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தித் தருபவர்களாகவும் இவர்கள் இருந்த நிலையில் Event Management-க்கு என்று தனியாக ஏஜென்சிகள் 2000க்கு பிறகு தோன்றி வெற்றிக் கொடி நாட்டின. ஊடகங்கள் இன்று மனிதனின் கைக்குள்ளேயே அடங்கி விட்ட இன்றைய கால கட்டத்தில் டிஜிட்டல் பிஆர் ஏஜென்சிகள் தனியாக செயல்பட்டு வருகின்றன.

இங்கிதம் பழகு என்று நம் முன்னோர் சொன்னது தனித் துறையாக திகழ்கிறது. அன்றாட வாழ்வில் நாம் கடைப்பிடிக்க வேண்டிய முக்கிய பண்பாகவும் இருக்கிறது PR பண்பு.




Published by : **K.K. Gnana Prabhakaran** on behalf of Sourashtra Chamber of Commerce, 5A, Pankajam Colony 3rd Cross Street, Teppakulam, Madurai - 625009
Printing by : **K.R. Ramalingam** @ Viswajith Printers, No. 1, Varpukannara Lane, Chinnakadai Street, Madurai - 625 001.
Editor : **K.K. Gnana Prabhakaran**

நம்பிக்கைக்கும், வலிமைக்கும்

JSW COLOURON+ கூரைகள்

JSW Steel

JSW கலர் ஆன் இந்தியாவின் முதன் முதலாக

ISI தரசான்று பெற்ற வண்ணம் பூசிய கூரைகள்





## ஸ்ரீ சிவபாலாஜி ஸ்டீல்ஸ் பி. லிட்.

18B, நத்தம் ரோடு, திண்டுக்கல் - 624 003.

போன் : 0451 - 2470573, செல் : 84899 23302, 91, 92, 93, 63

கிளை : 1/37, அப்பலோ மருத்துவமனை கார் பார்க்கிங் அருகில், மேலமடை, மதுரை - 625 020.

Email : sivabalajisteel@gmail.com, Web : www.s4ss.in

நீடித்த உழைப்பால் மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மீரா குஞ்ச் தயாரிப்புகள்

Meerakunj

RIGID PVC PIPES, FITTINGS & TANKS

AN ISO 9001 : 2008 COMPANY

Trust us with all your Electrical Plumbing and Agri needs...




## மீரா குஞ்ச் பாலிடிரேடர்

17-18, காக்கா தோப்புத் தெரு, மேல மாசி வீதி, மதுரை - 625 001.

போன் : 0452-2343372, 4381372, 4373372, செல் : 98421-43372

E-mail : meerakunjpipes@yahoo.in www.meerakunj.com

## VIGNESH GRAPHICS



*All Kinds of Printing Solution*

- Brouchers
- Wedding Cards
- Souvenirs & Directories
- Visiting Cards

Head Office : 79-A, South Marret Street, Madurai - 625 001.

Branch : No. 33, Manjanakara Street, Madurai - 625 001.

Branch : Plot No. 48/5, Chinna Anuppanadi, Industrial Plot Area, Near ABC Badminton Club, Mela Anuppanadi, Housing Board Colony, Madurai - 625 009.

O : 96980 11066 | Ph : 93441 01432 | 98434 14310 | Email : vgmadurai1@gmai.com

- Letter Pads
- Shopping Bags
- Paper Bags
- Menu Cards



விழித்து எழுந்தவுடன் கிடைப்பதில்லை வெற்றி ! விழுந்து எழுந்தவுடன் கிடைப்பதே வெற்றி !!

## ஸ்ரீ விஜயலெட்சுமி ஸ்கிரீன்

### விஜயலெட்சுமி DTP & ஸ்கிரீன்

91506-00904, 99940-18805, 78128-19162

கதிர்வேல் நகர் 1 வது தெரு, 51/51, பாலு கொத்தனார் தெரு, மீனாட்சி நகர், வில்லாபுரம், மதுரை-12.

SINCE-1993 01-07-1993 31 Years 2023 SvlS

வெள்ளி விழா கண்ட நிறுவனம்

அனைத்தும் சிறந்த முறையில் செய்து தரப்படும்

- தினசரி & கட்டிங் மாத காலண்டர்
- 12 DAYS DELIVERY மல்டிகலர் ஸ்டிக்கர்
- தமிழ் டைரி ஆங்கில டைரி
- 30 DAYS DELIVERY கோல்டு ஸ்டிக்கர்
- 20 DAYS DELIVERY ஜூட் பேக் & தாம்பூல பை
- பார்கோட் ஸ்டிக்கர் 5 to 10 DAYS DELIVERY
- விபூதி கவர் 7 DAYS DELIVERY
- சாமி படம் வுட்லேமினேசன்
- ஸ்கூல் லேபிள்




நட்பை விட ! நம்பிக்கையை விட !! நாணயமே சிறந்தது !!!

Cell : 98421-18873, 98428-18873

R.R. பாலகுமார்

R.R. குபேந்திரன்

R.R. பிரேம்குமார்

e.mail : svlsmadurai@gmail.com

Date of Posting : 20.06.2026 / BPC MDU
Printed Matter / Book Post
Date of Publication 20th of Every Month

KSPL,Madurai

**Kuttuva Silicates (P) Ltd.,**

5A, (New No.17) New Teppakulam Colony, Near Annai Chandramathi Mahal, Madurai-625 009.
Email: sales@kuttuvasilicates.com, https://www.kuttuvasilicates.com
Phone: Office: +91 452 2312293 / 98409 60846



Manufacturers of
Sodium Silicate Liquid
Sodium Meta Silicate Powder
Geo Polymer Concrete Liquid

VSOC Institute for Trauma Shoulder & Knee Sports Injury Arthroscopy Joint Replacement

**வேல் மருத்துவமனை**
**வேல் சிறப்பு எலும்பியல் மையம்**
Institute for Trauma, Shoulder & Knee, Sports Injury, Arthroscopy & Joint Replacement

VALE HOSPITAL RIGHT TREATMENT IS EVERYONE'S RIGHT

45, குருவிக்காரன் சாலை, அண்ணா பஸ் ஸ்டாண்டு, மதுரை- 625 020. Ph: 0452-4367597
Contact : 97871 91156, 95003 16661, 93442 46436 | vsoc.drkns@gmail.com | www.valeortho.com
Dr. K.N. சுப்ரமணியன் MBBS, MS, MRCS Ed, M.Ch. Orth, FRCS (Tr & Orth), CCT Orth (GMC-UK)
Chief - Otho Unit 3 / Senior Consultant, Velammal Medical College & Speciality Hospital, Madurai.



24hrs Service




சிறப்பம்சங்கள்
- நவீன கருவிகள் பொருத்தப்பட்ட அறுவை சிகிச்சை அரங்கம்
- முழுவதும் குளிரூட்டப்பட்ட மருத்துவமனை
- நவீன நுண்துளை சிகிச்சை கருவிகள்
- மூட்டு மாற்று சிகிச்சைக்கான சிறந்த உள்கட்டமைப்பு
- எலும்புகளுக்கு உண்டான ஸ்டெம் செல் சிகிச்சை
- விளையாட்டு மறுப்பயிற்சி
- மருந்தகம்
- டிஜிட்டல் எக்ஸ்ரே
- இரத்தப் பரிசோதனை
- நவீன பிஸியோ

Experience the Expertise Advice

உங்கள் எலும்பு மற்றும் மூட்டு பிரச்சனைக்கு எளிய தீர்வு மையம்
- முழங்கால் ஜவ்வு பழுதடைதல்
- தீராத தோள் மூட்டு வலி
- தோள் மூட்டு விலகுதல்
- விளையாட்டு காயங்கள்
- மூட்டு தேய்மானம்
- விபத்தினால் உண்டான சிக்கலான மூட்டு பிரச்சனைகள் & இதர எலும்பு & மூட்டு நோய்கள்

- மூட்டு நுண்துளை சிகிச்சை
- விபத்து அறுவை சிகிச்சை
- முழங்கால் & தோள் மூட்டு மாற்று சிகிச்சை
- விளையாட்டு இயல்முறை பயிற்சி

*Right Treatment is Everyone's Right*

नवीन एवं नवीकरणीय ऊर्जा मंत्रालय
MINISTRY OF NEW AND RENEWABLE ENERGY
सत्यमेव जयते

தென் தமிழகத்தின்
**நம்பர் 1**
சோலார் நிறுவனம்



Prakash Green Energy
Providing Perfect Solar Solutions

வீடுகளுக்கு
78000 ரூ
அரசு மானியமாக பெற்றுத் தரப்படும்

Premium Quality
30+ Years Warranty
100 % Guarantee

MSME
TANGEDCO

**அதிக மின் கட்டணம் செலுத்துகிறீர்களா ?**

உங்கள் வீடு, வணிக கட்டிடம் மற்றும் தொழிற்சாலைகளுக்கு அதிக மின் கட்டணம் செலுத்துவதை தவிர்த்திடுவீர்

வங்கி கடன் வசதியும் உண்டு. வட்டி விகிதம் 6.5% முதல்
+91 63749 01500
support@prakashgreenenergy.com
www.prakashgreenenergy.com
HEAD OFFICE:
14R, N.S Konar Street,
Jaihindpuram,Madurai - 625011

